பெரும் எதிர்ப்பு வெள்ளம் நீந்தினோம்

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி. மு. கழக தின இதழ் ஆசிரியர் அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா; இலங்கையில் 10 சதம்.
சென்னை: ஆவணித் 7௳ திங்கள் (23—8—54)
வெளியூர்: ஆவணித் 8௳ செவ்வாய் (24—8—54)
மலர்: 2 இதழ்: 60

பல்லவர் தலைநகரில் பகுத்தறிவுப் படையின் பவனி!

மாட்சி மிகும் காட்சிகள்! கருத்தூறும் பேருரைகள்!

காஞ்சி மாநாட்டு நிகழ்ச்சி விவரங்கள்

பல்லவர்தம் பரந்த சாம்ராஜ்யத்தின் பழம் பெரும் தலைநகராய் அன்று விளங்கிய காஞ்சி மாநகரம், இன்று கழகத்தின் பாசறையாக விளங்கும் சிறப்புடைய, அந்நகரில் கடந்த சனி, ஞாயிறு ஆகிய இரு நாட்களிலும் நடைபெற்ற செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக 2-வது சமூக சீர்திருத்த, அரசியல் மாநாடுகள் எடுத்துக் காட்டிக் கொண்டிருந்தன.

காஞ்சியில் மாநாடுகள் என்றால், கழகக் காளையர்தம் உள்ளத்தில் ஊற்றெடுக்கும் உவகையும் உவமையில்லா ஆர்வமும், பொங்கி வழியும் உணர்வும், எழுதிக் காட்டப்பட முடிந்தவையா என்ன?

சனியன்று காலையிலேயே கழக வீரர்கள் நகர் நோக்கி திரண்டு வந்துகொண்டிருந்தனர்; தங்களை வாழாது தடுக்கும் தடைகளை உடைத்தெறிய, தங்கள் உரிமையை—அல்ல—உயிரினும் இனிய, உயரிய மானத்தை பறித்து வைத்துக்கொண்டிருக்கும் ஆதிக்கத்தை எதிர்த்து உரிமையை நிலைநாட்ட, அவர்தம் உயிர்மிகு பொதுச்செயலாளரிடம் உத்தரவு கோரி!

நகரின் பல பகுதிகளும், பகுத்தறிவுக் கருத்துக்களையும், உரிமை முழக்கத்தையும், 'வருக! வருக!' என்ற வரவேற்பையும் தாங்கிய வளைவுகளாலும், தோரணங்களாலும், கழகக் கொடிகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன.

மாநாடுகள், கண்ணன் டாக்கீசை அடுத்துள்ள பெரிய திடலில் அமைக்கப்பட்டிருந்த மிக நேர்த்தியான பந்தலில் நடைபெற்றன.

மாநாட்டுப் பந்தலின் நுழைவு வாயிலில், மறைந்த மாவீரர் அழகிரி, அவரது ஆசைக் கனவுகள் நனவாகிக்கொண்டிருப்பதைக் காண்பதால் ஏற்படும் பூரிப்பாலோ என்னவோ, புன்னகை புரிந்த வண்ணம் பந்தலுள் புகும் யாவரையும் பார்த்துக்கொண்டே இருந்தார்!

செங்கற்பட்டு மாவட்ட கழகத் தோழர்கள்தம் அரும் பணி—அவர்கள் அமைத்திருந்த பந்தல், அதை ஒளி தரும் விளக்குகளாலும் களிமிகச் செய்து கடமை உணர்த்தும கழகக் கொடிகளாலும் அழகுபடுத்தியிருந்த முறை, அயராது அல்லும் பகலும் உழைப்பை அள்ளித் தந்துகொண்டிருந்த தொண்டர்தம் கட்டுப்பாடு, இன்ன பிறவற்றால்—ஒளிவிட்டுக் கொண்டிருந்தது.

பல்லவர் தலைநகரில் நடைபெற்ற அந்த மாநாடுகளில் பல்லாயிரம் பகுத்தறிவுக் காளைகள் பங்கு பெற்றனர். தாய்மாரும் எண்ணற்றவராய் கூடியிருந்தது குறிப்பிடத்தக்கது.

கிருஷ்ணன் பொம்மை உடைக்கப்பட்டது!

மதுராவில் மூவருக்குக் காயம்

ஆக்ரா, ஆக. 22—

இங்கும் மதுரைக்கு அருகே உள்ள 'ஸ்ரீகிருஷ்ண ஜன்மபூமி' என்னுமிடத்தில், கிருஷ்ண விக்ரகம் ஒன்றை கோவில் ஒன்றில் அமைக்க முயன்றபோது சிலர் அந்த விக்ரகத்தை உடைத்தனர் என்று தெரிகிறது. இதனை ஒட்டி இரு தரப்பாருக்கும் இடையே நடைபெற்ற கலவரத்தில் மூன்று பேர் காயமடைந்தனர் என்று தெரிகிறது.

அதனை ஒட்டி பல வீடுகள் கொள்ளையடிக்கப்பட்டதாம். சர்க்கார் ஊரடங்குச் சட்டத்தை அமுல் செய்திருக்கின்றனர் என்று தெரிகிறது.

சமூக சீர்திருத்த மாநாடு

21—8—54 சனி அன்று காலை 10 மணி அளவில் சமூக சீர்திருத்த மாநாட்டு நிகழ்ச்சிகள் தோழர் கா. வே. முருகேசனின் இன்னிசையுடன் துவங்கின.

அடுத்து, புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் மாநாட்டைத் துவக்கி வைத்தார்.

வரவேற்புக் குழுத் தலைவர் தோழர் சி. வி. எம். அண்ணாமலை எல்லோரையும் வரவேற்று, மாநாட்டின் குறிக்கோள் குறித்து எடுத்துச் சொல்லிவிட்டு, மாநாட்டிற்குத் தலைமை தாங்கி நடத்தித் தருமாறு கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

அவர் முன்மொழிந்ததை வழிமொழிந்து தோழர்கள் ஏ. கே. வேலன், காஞ்சி மணிமொழியார், சி. வி. ராஜகோபால் எம்.சி., நடிகர் நாராயணன் ஆகியோர் பேசினர்.

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் தலைமை ஏற்று அரியதோர் உரை நிகழ்த்தினார்; சிரித்துச் சிரித்துப் பேசி, சிந்தனையைத் தூண்டினார்.

அடுத்து, காலை நிகழ்ச்சிகளின் இறுதிச் சொற்பொழிவாக அமைந்த தோழர் டி. கே. தாமரைச்செல்வனின் "அருள்நெறியும், அறிவியக்கமும்" அரியதொன்றாக இருந்தது.

மீண்டும் மாலை நிகழ்ச்சிகள் 3-30 மணி அளவில் தோழியர் கே. ஆர். சுந்தராம்பாள், இசை முரசு நாகூர் அனீபா ஆகியோரின் இன்னிசையுடன் ஆரம்பமாயின.

தோழர் அ. பொன்னம்பலனார், "நாம் கண்ட வெற்றி"களை வரிசைப்படுத்தி எடுத்துக் காட்டினார்.

தோழியர் அருண்மொழி "மகளிர் கடமை" குறித்து விளக்கினார்.

தோழர் ஏ. வி. பி ஆசைத்தம்பி "மறைந்த மாவீரர்களை" மனக்கண் முன் கொண்டு வந்து நிறுத்தி, அவர் தம் அரிய சேவைகளை நினைவூட்டினார்.

அடுத்து தோழர் சி. பி. சிற்றரசு "வரலாற்றில் நாம்" எங்கே இருந்தோம், இன்று எங்கே இருக்கிறோம். எப்படி, இப்படித் தாழ்வுற்றோம்? என்ற கேள்விக் குறியையும் நிறுத்தி பதிலும் இறுத்தார்.

அடுத்து தோழர் கண்ணதாசன் "கம்பன் செய்த வம்பு" நம்மவர் வாழ்வை நாசம் செய்யும் கருவியாய் அமைந்ததலேயே அதனைக் கண்டிக்கிறோம் என்று அழுத்தந் திருத்தமாய்ச் சொன்னார்.

தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்கள்தம் அருமைச் செல்வி, பத்து வயது நிரம்பாத மாலதி பானுமதி "நான் கண்ட சமூகம்" எப்படிப் பரிதாபமாயிருக்கிறதென்பதை கேட்டோர் வியக்க, தலைவர் பாராட்ட, மாணவ பாணியில்

(4-ம் பக்கம் பார்க்க)

கடும் ஏளனப் புயலையும் தாங்கினோம்!

குறி தெரிந்தால் மட்டும் போதாது; குறி பார்த்து வீசவும் தெரியவேண்டும்!

வளர்ந்து வரும் சக்தியை ஆக்க வேலைக்குப் பயன்படுத்துவோம்

செங்கற்பட்டு மாவட்ட மாநாட்டில் பொதுச்செயலாளர் அண்ணா

"ஒரு கழகமோ, கட்சியோ வளருகிறதா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள, சாதாரணமான தனிப்பட்டவர்கள் கூடிப் பேசுகிற இடத்திலே, கடைவீதியிலே, சாலை வழியிலே இங்கெல்லாம் அந்தக் கழகமோ, அக்கட்சியின் பெயரோ அடிபட்டால் அதுவே போதுமான அத்தாட்சியாகும். அதை வைத்துப் பார்ப்போமானால், தி. மு. கழகத்தின் பெயர் அடிபடாத இடமே கிடையாது. அதன் நடவடிக்கைகளைப் பேசாத கட்சிகளே கிடையாது. கழகப் பெயரை உச்சரிக்காத கட்சித் தலைவர்களே கிடையாது.

அப்படி என்றால், எல்லாக் கட்சியினரும் தி. மு. கழகக் கொள்கைகளை ஆதரித்துப் பேசுகின்றனர் என்று நான் சொல்லமாட்டேன். அவ்வளவு பைத்தியக்காரனல்ல நான்!

கம்யூனிஸ்டுகளானாலும், காங்கிரசாராயினும், பிரஜா—சோஷலிஸ்டுகளாயினும், இசைக் கச்சேரிகளில் கடைசியாக மங்களம் பாடுவதுபோல், தி. மு. கழகத்தைக் கிண்டல் செய்தோ, கேலி பேசியோ, கண்டனம் தெரிவித்தோ, எப்படியோ ஏதாகிலும் நம்மைப்பற்றிப் பேசினால்தான் அவர்கள் கூட்டம் பூர்த்தியாகிறது என்கிற நிலைக்கு தி. மு. கழகம் வளர்ந்திருக்கிறது.

இந்த, எல்லோராலும் பேசப்படுகிற நிலைக்கு தி. மு. கழகம் வளர எத்தனைக் கஷ்டங்களை மேற்கொள்ள வேண்டியிருந்தது?

அதை எதிர்த்து வந்த வெள்ளம் என்ன, சாமான்யமானதா? அல்ல அல்ல—கழகத்தின் மீது வீசிய பொறாமைப் புயல், அடக்குமுறைப் புயல், ஏளனப் புயல், எதிர்ப்புப் புயல், என்ன கொஞ்ச நஞ்சமா? அத்தனை எதிர்ப்பு வெள்ளத்தையும் எதிர் நீச்சல் அடித்துத்தான், புயல்களைத் தாங்கிக் கொண்டுதான், இன்று தி. மு. கழகம் எல்லோரின் கவனத்தையும் கவரும் கழகமாக வளர்ந்திருக்கிறது.

இன்று தி. மு. கழகம், நாட்டில் நிலைத்துவிட்ட ஒரு ஜனநாயக அமைப்பு. இதை உணர்ந்து கொள்ள மறுப்பவர்கள், நாட்டின் உண்மை நிலை அறியாதவர்கள்! உணர்ந்தும் வெளியே சொல்ல வெட்கப்படுபவர், சொன்னால் எங்கே இவர்கள் இன்னும் வளருவார்களோ என்று எண்ணிக் கொண்டிருப்பவர்கள், தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொண்டவர்கள் ஆவார்கள்!

தி. மு. கழகத்தைச் சரியாகப் புரிந்து கொண்டிருப்பவர்களும், சரியாகப் புரிந்து கொள்ளாமலே இருப்பவர்களும் தங்கள் தங்கள் கருத்திற்கேற்ப நம்மைப் பற்றிச் சொல்கிறார்கள்.

காங்கிரசார் நினைக்கிறார்கள்—'இவர்கள், தங்களை ஒழிக்க வந்தவர்கள்,'—என்று!

கம்யூனிஸ்டுகள் கருதுகிறார்கள்—அவர்களை ஒழிக்க நாம் வளருவதாக!

பணக்காரர்கள் நினைக்கிறார்கள்—தங்கள் பகட்டான வாழ்வைப் பறித்துச் செல்லப் படை திரட்டுகிறார்கள் இவர்கள், என்று!

பார்ப்பனர் நினைக்கிறார்கள்—நம்மை அவர்கள் பகைவர்கள் என்று!

சினிமாத் துறையிலிருப்பவர்கள் சிலர் நினைக்கிறார்கள்—தி. மு. கழகத்தார் தங்கள் மீது படை எடுத்துவிட்டிருப்பதாக!

இவர்களிலே பலர், சில நேரங்களில் நம்மை முற்போக்குவாதிகள் என்றும், சில நேரங்களில் பிற்போக்கு சக்திகள் என்றும் பேசுகிறார்கள்.

ஆனால், இவர்களில் எவரும் நம்மை, இன்னும், இன்னவர்தான், இப்படிப்பட்டவர்தான் என அறுதியிட்டுச் சொல்லாதவர்களாக இருக்கிறார்கள். இதற்குக் காரணம், அவர்களுக்கும் நமக்கும் கிட்டிய நெருக்கமில்லை, நம்மை நன்கு புரிந்துகொள்ள!

தி. மு. கழகம் எல்லாத் துறைகளிலும் படை எடுத்திருக்கிறது; இதனாலேயே யாருக்கும் பகையுமல்ல! தனது கொள்கைகளையும், இலட்சியத்தையும் விட்டுக் கொடுக்காது!

சமுதாய நலிவுகளைப் போக்கவேண்டும்; மத, மார்க்கத் துறைகளிலே, அயற்றைப் பரப்பும் கலைத்துறையிலே நிலவும் சீர்கேடுகளைப் போக்கியாக வேண்டும்; பொருளாதாரத் துறையிலே ஓங்கி நிற்கும் ஏற்றத் தாழ்வுகளை அகற்றியாக வேண்டும்; அரசியலில் இடம் பெற்றிருக்கும் இழிதன்மையைத் துடைத்தாக வேண்டும்.

(4-ம் பக்கம் பார்க்க)

நம் நாடு
தி.மு.கழகத்தின் இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 23—8—54 திங்கள்

அரசியல் பாகவதர்கள்!

"ஆண்டவன் ஒருவன் இருக்கிறான் என்பதை மறவாதே;

"அவன் தூணிலும் இருக்கிறான்; துரும்பிலும் இருக்கிறான்;

"நீ செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் கவனித்துக் கொண்டிருப்பான்; நீ செய்யும் அக்கிரமத்தையும் பார்த்துக் கொண்டிருப்பான்; நல்ல செயலையும் குறித்துக் கொண்டேயிருப்பான்;

"பொய் பேசினால் நரகத்திற்கு அனுப்புவான்;

"களவு புரிந்தால் காராக்கிரகம் தள்ளுவான்;

"சூதும் சூழ்ச்சியும் உன்னை ஏழேழு ஜென்மத்திற்கும் பாவக் கடலில் தள்ளும்;

"பிறன் மனையாளை இச்சித்தால், இகபரம் இரண்டிலும் தண்டனை பெறுவாய்;

"ஆம்! ஆண்டவன் இருக்கிறான், உன்னைப் பார்த்தபடி! உன்னைப் படைத்தவன் இருக்கிறான், உன் செயலை சீர்தூக்கிப் பார்க்க!

"ஆகவே, அன்பைப் பெருக்கு; பொய்யை ஒழி; சூதும் சூழ்ச்சியும் செய்யாதே; பெண்ணாசை மாயப் பிரபஞ்சத்தில் விழாதே!"

என்று உரத்த குரலில் கூறி, கீதையிலிருந்து மேற்கோள் காட்டி, கம்பனின் கவிதையிலிருந்து சில பாட்டுகள் பாடி, கந்த புராணத்தில் ஆண்டவன் அவதாரமெடுத்து, இந்த உலகத்திலே செய்த அற்புதமான செயல்களை விளக்கி, 'நமப் பார்வதி பதயே!' என்று கூறி, கூடியிருந்த பக்தர்கள் ஒன்றாக ஆண்டவன் தாளடிப் பணிந்து, அறவழி நாடுமாறு பிரசங்கமாரி பொழிந்துவிட்டு, கற்கண்டு போட்டுக் கலக்கிய பாலைக் குடித்துவிட்டு அமருகிறார், பாகவதர்!

ஊருக்கு உபதேசம் செய்த பாகவதருக்கு மரியாதை செலுத்த எண்ணிய பக்தர்கள் அவர் அருகில் வந்து, தாளடி பணிந்து, "கடவுட் கதை கேட்டு, பாவ மூட்டை கழுவினோம்!" என்று தங்கள் பக்திப் பரவசத்தில் நிற்கின்றனர்!

பாகவதர், 'ஆண்டவன் அருள் விளங்கட்டும்!' என்று மேனியின் மேல் கிடக்கும் ருத்ராட்சங்களின் இடையில் இழைக்கப்பட்ட தங்கஇழைப் புகழ் தெரிய, ஆண்டவன் நாமத்தை ஜபித்த வண்ணம் விபூதிப் பிரசாதம் தருகிறார்!

உள்ளம் குளிர்ச்சியடைந்த நிலையில், பக்தன் போகிறான்! பாகவதரும், பக்திப் பணியை இயற்றிவிட்டு வீடு திரும்புகிறார்!

வீட்டிலே அவருக்கு வரவேற்பளிப்பது, வெண் பொற்காசுகள்!

"இந்த ஆண்டு நூறு ரூபாய்தான், கொடுத்தான், தர்மகர்த்தா! கோவில் நிலங்களில் நல்ல விளைச்சலில்லையாம்!"

"கிடக்கிறான், தள்ளு! இந்த வயல் சிங்காரவல்லிக்குக் காசுமாலை போட பணம் கிடைத்தது; நமக்குத்தானில்லையாம்! கண்ட ஜனங்கள் தர்மகர்த்தாவானால் பின் என்ன நடக்கும்?"

அடுத்த கட்டத்திலே பாகவதருக்கு வரவேற்பளிப்பது, அமங்கலியானாலும், அழகோடு நிற்கும் பாவை ஒருத்தி! சென்ற ஆண்டு சென்னியூர் பிரசங்கத்திலே, பாகவதரின் வாக்கு வன்மையிலே மயங்கி, பாகவதரிடம் சிவமய விளக்கம் பெற வந்த அந்த வனிதைக்கு 'சிவனடியார் தொண்டே சிவன் தொண்டு,' என்று பாகவதர் விளங்க வைத்ததால், பாகவதருக்கு மடிக்கையறைத் துணைவியானாள்!

அன்று அவள் முகத்திலே சோகம் தாண்டவமாடிற்று; காரணம், மருதூரில் பிரசங்கம் செய்யப் போன பாகவதர், அங்கும் ஒரு ரமணியை சிவனடியார் தொண்டில் ஈடுபட வைத்தார் என்றும், அதன் பயன், அந்த ரமணி, உரிமையோடு இன்று வீடு தேடி வந்து நிற்கிறாள் என்பதுதான்!

இப்படி சொந்தக் கதைகள் இருக்க, பாகவதருக்குச் சேர வேண்டிய பங்குத் தொகை நாலாயிரம் என்று கூறினான், அங்கு வந்து நின்ற [illegible]யிரம்!

கோயிலிலே இடிந்துபோயிருந்த மண்டபத்தை புதுப்பித்ததில், அவருக்குக் கிடைத்த 'கமிஷன்' அது!

இப்படிப்பட்ட பாகவதரை நீங்கள் என்னவென்று எண்ணுவீர்கள்?

பகலிலே தியானம்! மாலையிலே பக்த சத்கதா காலட்சேபம்! இரவிலே போகக் களத்திலே புரள்வார்!

மடத்துச் சொத்திலே 'கமிஷன்' ஆண்டு தோறும் கிடைக்க ஏற்பாடு! இதோடு, மக்கள் காணிக்கை வேறு!

மக்களைப் பார்க்கும்போது, "ஆண்டவன் ஒருவன் இருக்கின்றான்," என்கிறார்!

அவர்களை விட்டுத் தனியிடம் செல்லும்போது, மட்டரகமான செயலில் இறங்குகிறார்!

பேசுவது ஒன்று; செய்வது ஒன்று!

உபதேசிப்பது ஒழுக்கம்; கடைபிடிப்பது நேர் எதிரானது!

சொல்லுக்கும் செயலுக்கும் சம்பந்தமில்லை!

சொல்வதால் ஏற்படும் புகழை, தன் சுக போக வாழ்வுக்குத் திரையாக்குகிறார்!

இந்த பாகவதர்கள் மதத் துறையிலே இன்று நாட்டிலே அதிகம்! அதைவிட அதிகம் அரசியல் துறையிலே!

"ஜாதிமத பேதமற்ற சமுதாயம்தான் எங்கள் குறிக்கோள்; பாரத நாட்டின் பழம் பெருமையைப் பாரீர்; மக்கள் இன்றிருக்கும் நிலைமையைக் காணீர்; ஏழை, கண்ணீர் விட்டு சாகிறான்; அவனுக்கு உழைக்க வாருங்கள்; அவன் வாழ்வு வளம் பெற, அரசைப் பலப்படுத்துங்கள்; இந்தியாவின் எல்லோரும் நலம் பெற்று வாழத்தான் நாங்கள் பாடுபடுகிறோம்; இதைக் கெடுக்கப் பார்க்கும் கள்ளமார்க்கெட்காரர்களை ஒழியுங்கள்; கொள்ளை லாபக்காரர்களை ஒழியுங்கள்; பதவி பதவி என்று அறிவிலித்தனமான ஆசைக்கு ஆட்படாமல், நாட்டிற்கு உழையுங்கள்; எங்களோடு சேர்ந்து உழைத்தால் நாடு வளம் பெறும்; மக்களாட்சி முறை வளரும்; நாட்டின் வருங்காலந்தான் எங்கள் கண் முன் எப்பொழுதும் நிற்கிறது; ஆகவே, நமது சர்க்காரின் கையைப் பலப்படுத்துங்கள்!"

என்று நாள்தோறும் ஒவ்வொரு ஊரிலும் நமது தேசியத் தோழர்கள் பேசி வருகின்றனர்.

ஊராளும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட இவர்கள், சந்தர்ப்பம் கிடைத்தபோதெல்லாம் மாற்றுக் கட்சியினரைத் திட்டவும், நாட்டிலே அவர்கள் ஒருவர்தான் ஏழைக்கு உழைப்பதாயும், அதற்காகத் தங்களையே தியாகம் செய்வதாகவும் கூறி வருகின்றனர்.

ஆனால், உண்மையை ஆராயப் போனால், திரை மறைவில் இவர்களுக்குள் நடக்கும் பதவிப் போட்டியும், அதிகாரத்தில் பங்கு பெறுவது யார், யார் என்று போட்டுக் கொள்ளும் சண்டையும் நாடு பூராவும் நாற்றமடிக்கிறது!

'ஏழைக்கு உதவுகிறோம்,' என்று கூறிக் கொண்டே, முதலாளி கூட்டத்திடம் சரண் புகுந்து, அவர்கள் கொழுக்க, திட்டம் தீட்டித் தருகின்றனர்!

மக்கள் பசியால் வாடும்போது, ஆளும் வர்க்கத்தினர் அரசமாளிகையின், கேளிக்கைகளிலே ஈடுபடுகின்றனர்!

நாட்டிலே பஞ்சம் என்ற கூக்குரல் எழும்போது கூட, பொருளாதாரச் சீர்திருத்தங்கள் செய்வதில்லை!

ஜாதிகள் கூடாதென்பார்கள்; ஆனால் ஜாதிகளை ஏற்படுத்திய மார்க்கத்தை புகழ்ந்து விழாக் கொண்டாடுவார்கள்!

அரசியலின் ஆதிபத்திய போக்குக் கூடாதென்பார்கள்; உரிமைக் குரல் எழுப்பும் மக்களை துப்பாக்கி கொண்டு தாக்குவார்கள்!

பேச்சிலே சுதந்திரம் என்பர்; நியாயத்திற்கு பரிந்து பேசுபவனை சிறையிலே தள்ளுவர்!

தங்கள் சூதையும், சூழ்ச்சியையும் மறைக்க, எழுதுகோல் எடுக்க முடியாமல், எழுத்தாளர் கையைக் கட்டுவர்!

ஜனநாயகம், மக்களாட்சி என்று ஊரார் முன் வானளாவப் பேசி, உரிமைக்குப் போராடும் மாற்றுக் கட்சியினரை குண்டாந் தடிகொண்டு தாக்குவர்!

நாட்டிலே மக்களை அறியாமையில் ஆழ்த்தி, கடவுள் பெயரால் காசு சம்பாதித்து, போக போக்கியத்திலே ஈடுபடும் கபட வேடதாரிகள், பாகவதர்கள்!

இதைப்போல அரசியல் மேடையிலே இன்று தோன்றியிருக்கும் 'அரசியல் பாகவதர்கள்' ஏராளம்!

பேசுவது மக்களாட்சியில் பதவியிலிருக்கும் தாங்கள், செய்யப் போகும் மகத்தான காரியங்களைப் பற்றி; மக்களின் கடமைகளைப் பற்றி; அவர்கள் இருக்க வேண்டிய ஒழுங்கு பற்றி!

ஆனால், ஊராருக்கு உபதேசம் செய்தான பிறகு, ஊராள்வோர் நடக்கும் விதமோ, மதப் பிரசங்கம் செய்யும் பாகவதரைப் போன்றுதான்!

ஆகவேதான், பாகவதரை மதத் துறையிலே ஒழிப்பது எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம், இந்த 'அரசியல் பாகவதர்களை' அரசியல் அரங்கத்திலிருந்து ஒழிப்பது!

"கற்போம்; கற்றுக் கொடுப்போம்!"

உரிமையாட்சி கோராத கொள்கை முழக்கம் ஆபத்து!

பீகிங் நகரில் ஆட்லி, பெவான் முழக்கம்

இங்கிலாந்து பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவராக இருப்பவரும், தொழிற் கட்சியின் தலைவருமான தோழர் ஆட்லி, தொழிற் கட்சியின் 'தீவிர இடதுசாரி' தோழர் அனூரின் பெவான் உள்ளிட்ட ஏழு தொழிற் கட்சித் தலைவர்களுடன், சீனாவில் சுற்றுப் பயணம் செய்யும் வழியில், நேற்று பீகிங் சேர்ந்தார்.

கோமிங்கின் பிற்போக்கு ஆட்சி ஒழிக்கப்பட்ட பிறகு, வல்லரசு யோக்கியதையில் உள்ள கம்யூனிஸ்டல்லாத மற்றொரு நாட்டின் பிரதானத் தலைவர்கள், நாடு முழுவதும் அதிகார பூர்வமாகச் சுற்றுப் பயணம் செய்வதென்பது, தோழர் ஆட்லியின் சுற்றுப்பயணமே ஆகும்.

பீகிங் நகரில், பாராளுமன்றத்தின் கீழ்ச் சபைக்குச் சமமானதாகப் பாவிக்கக் கூடிய, மக்கள் ஆலோசனைக் குழுவொன்றின் சார்பாக, பிரிட்டிஷ் தொழிற் கட்சித் தலைவர்களுக்கு ஓர் வரவேற்பு கொடுக்கப்பட்டது.

தனது குழுவுக்குக் கொடுக்கப்பட்ட வரவேற்புக்கு நன்றி தெரிவித்துத் தோழர் ஆட்லி, சீனாவில் அன்று பிற்போக்குத்தனமாயிருந்த பெருஞ் சக்திகளுக்கெதிராக, போராடும் சீன மக்களின் செயலாற்றலுக்குப் பெரிதும் நன்றி தெரிவித்தார்.

மேலும் அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:

"நவ சீனத்தின் புது வாழ்வு பொலிவுற்றுத் திகழவேண்டுமென்பது என் அவா. தொழிற் கட்சியினராகிய நாங்களும், இந்த சீன கம்யூனிஸ்டுத் தோழர்கள் சாதித்திருக்கும் கஷ்ட நஷ்டங்களை ஏற்று நாட்டை நல்ல முறையில் உருவாக்க வேண்டிய கட்டத்திலிருந்து ஆளாக்கப்பட்டிருக்கிறோம். ஆனால், இந்த மாறுதல்களை சமாதான வழியிலும், சட்டத்திற்குட்பட்டும் சாதித்து விடக்கூடிய சந்தர்ப்பத்தைப் பெற்றிருக்கிறோம். உங்களுக்கு முன்னுள்ள பிரச்னைகளுக்கு எவ்விதப் பரிகாரம் தேடப் போகிறீர்கள் என்பதுபற்றி கேட்கவோ, அதுபற்றி ஆலோசனை கூறவோ நான் யார்? ஆனால், சமயம் நேர்ந்தால், எங்களுடைய அனுபவபூர்வமான ஆலோசனைகளும், ஆதரவும் உங்களுக்கு மனப்பூர்வமாக அளிக்கப்படும் என்பதை நீங்கள் நம்பலாம், அதேபோல், உங்களிடமிருந்தும் நாங்கள் கற்றுக்கொள்ள வேண்டியவைகளை கற்றுத் தெளிவோம்."

மேலும் ஆட்லி பேசுகையில் குறிப்பிட்டார்:—

"சுதந்திரம் என்பது எல்லோருக்கும் உரியதும் தேவையானதும்தான்; ஆனால், சுதந்திரமே எல்லாவற்றிற்கும் எல்லைக்கோடு என்பதாகிவிடாது. நம்முடைய தாய்நாட்டின் மக்களின் வாழ்வுச் சாதனங்களை மேலான நிலைமைக்குக் கொண்டு வந்து, அவர்களுடைய நிலைமையை உயர்த்திக் காட்டுவதில்தான் உண்மையான சுதந்திரம் இருக்கிறது. எங்கள் நாட்டில் இதைக் கூடுமானவரையில் செய்து முடித்திருக்கிறோம். இதைப் போலவே மற்ற நாட்டு மக்களும் வாழ விரும்புவதுடன், அதற்கான உதவிகளைச் செய்யவும் விரும்புகிறோம். விஞ்ஞான அறிவும், தொழில் நுணுக்க மேதைத்தனமும் மேற்கில் காணப்படுவது போலவே, எல்லா நாடுகளிலும் இடம் பெறவேண்டுமென விழைகிறேன்:

சீன அரசாங்கத்தின் நோக்கமெல்லாம், அதிகார பலத்தைப் பெருக்குவதாக இல்லை; தனி மனிதனின் சந்தோஷத்தைக் கவனித்தே காரியமாற்றுகிறது."

தோழர் ஆட்லிக்குப் பிறகு பேசிய, தோழர் அனூரின் பெவான் குறிப்பிட்டதாவது:—

"முதலாளித்துவத்தை எதிர்த்து, தொழிலாளி வர்க்கம் போராடிய போராட்டங்கள், பல்வேறு நாடுகளில் பல தரப்பட்ட வகையில், உருவெடுத்துச் செயலாற்றியிருக்கிறது. ஏனென்றால், வெவ்வேறு விதமான சரித்திர அமைப்புகளை முகாந்திரமாக வைத்து அவைகள் போராடின. இந்த வேறு

(4-ம் பக்கம் பார்க்க)

கட்டாது சரியாம்!

கிருபளானியின் திருப்தி?

புதுடில்லி, ஆக 20—

பிரஜா—சோஷலிஸ்டு கட்சியின் தலைவர் கிருபளானி அசோக் மேத்தா ஆகியோரிடம் திருவாங்கூர்—கொச்சி அமைச்சர் பி. கே. குஞ்சு, திரு—கொச்சியின் நிலைமையை எடுத்து விளக்கினார் என்று தெரிகிறது.

திரு—கொச்சி சர்க்கார், நிலைமையைச் சமாளிக்க எடுத்த நடவடிக்கைகள் பற்றி பி-சோ. கட்சித் தலைவர்கள் தங்கள் திருப்தியைத் தெரிவித்தார்களாம்!

துப்பாக்கிப் பிரயோகம் பற்றி நடைபெறும் விசாரணையைத் தவிர வேறு ஏதும் நடைபெறாது என்று தெரிகிறது.

கொரியாவில் புது இராணுவ டிவிஷன்கள்

அமெரிக்கா தயார் செய்யும்

தென் கொரியாவிலிருந்து தான் திருப்பி அழைத்துக்கொண்டிருக்கும் நான்கு அமெரிக்க இராணுவ டிவிஷன்களுக்குப் பதிலாக அமெரிக்கா வேறு கொரிய அணிப்புகளைத் தயார் செய்யும் என்று தெரிகிறது.

கொரிய இராணுவத்தில் புதிதாக ஆறு டிவிஷன்கள் தயார் செய்யப்படுமென்று அமெரிக்கப் பாதுகாப்பு இலாகாவிலிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

அமெரிக்காவைப் போன்றே கனடாவும், கொரியாவில் உள்ள தனது படையில் உள்ள 6,000 பேரை திரும்ப அழைத்துக் கொள்ளும் என்று தெரிகிறது.

கழகச் செய்திகள்

சென்னை புளியந்தோப்பு தி. மு. கழகம்

15—8—54 மாலை 4-30 மணிக்கு, தோழர் மொ. வெ. இமயவரம்பன் தலைமையில், கழகப் பணி மனையில், செயற்குழு கூட்டம் நடைபெற்றபோது, கழக நான்காம் ஆண்டு விழாவை அக்டோபர் இறுதிக்குள் நடத்துவதெனவும், விழா குழுவிற்குத் தோழர்கள் இளவரசு, சுப்பிரமணி, செங்கரதான் ஆகியோரைத் தேர்ந்தெடுத்ததுடன், தோழர்கள் ஆர். கே. மூர்த்தி பொருளாளராகவும், எல்லப்பன் மாவட்டப் பிரதிநிதியாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர் கருப்பையாவின் ராஜிநாமாவை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அருப்புக்கோட்டை தி. மு. க.

13—8—54 இரவு, தோழர் மா. பொன்னுசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற செயற்குழு கூட்டத்தில், 53 தோழர்கள் கையெழுத்திட்ட மனுவைப் பற்றி விவாதித்து, இறுதியில், தோழர்கள் இ. முத்துக்காளை, கே. ராமசாமி, சே. சண்முகவேலன், சே. சண்முகப்பெருமாள் ஆகிய நால்வரும் கழக உறுப்பினர்கள் பதவியிலிருந்து விலக்கப்பட்டனர்.

லெப்பைக்குடிக்காடு தி. மு. கழகம்

13—8—54 மாலை 5 மணிக்கு தோழர் சி. பா. அப்துல்சமான் தலைமையில் கழக உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றபோது, கழக முதலாவது ஆண்டு விழாவை செப்டம்பர் 10-ந் தேதிக்குள் நடத்துவதெனவும், பொருளாதார நெருக்கடியின் காரணமாக பொதுமக்களிடம் நன்கொடை வசூலிப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

ஆமதாபாத்—மணிநகர் தி. மு. கழகம்

14—8—54 காலை 10 மணிக்கு 2-வது வட்டக் கழக இல்லத்தில் தோழர் ச. கணேசனார் தலைமையில் செயற்குழு கூட்டம் நடைபெற்றபோது, 7 மாத கணக்குப் பரிசீலனை செய்யப்பட்டதுடன், சில முக்கிய முடிவுகளும், தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

பம்பாய் — பாண்டுப் தி. மு. கழகம்

24—7—54 காலை 9 மணியளவில் கழகச் செயற்குழு கூட்டம், தோழர் தேவதாசன் தலைமையில், பணி மனையில் நடைபெற்றபோது, கழகச் சார்பில் புத்தகாலயம் திறப்பதென்றும், நாடகம் நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டதுடன், தோழர்கள் விசுவநாதன், முத்துசாமி விளம்பர உறுப்பினர்களாகவும், எம். கல்லியா செயற்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திருப்புத்தூர் தி. மு. க.

14—8—54 மாலை 5 மணிக்கு தென்மாப்பட்டு வள்ளுவர் இரவுப் பள்ளியில், தி. மு. கழக செயற்குழு கூட்டம், தோழர் மகிசெப்தி தலைமையில் நடைபெற்றபோது, தீர்மானங்கள் பல நிறைவேற்றப் பட்டதுடன், செப்டம்பர் இரண்டாவது வாரத்தில் திராவிட நாடு பிரிவினை நாளை கொண்டாடுவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

காங்கயம் தி. மு. கழகம்

14—8—54 இரவு 9 மணியளவில் கழக செயற்குழு கூட்டம் தோழர் தணிகாசலம் அவர்களது அறையில் நடைபெற்றபோது, தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டதுடன், செப்டம்பர் 17-ம் நாள் திராவிட நாடு பிரிவினை நாள் கொண்டாடுவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

பி.-பள்ளிப்பட்டி தி.மு.க.

18—8—54ல், பிற்பகல் 1-மணிக்கு சேலம் அரூர் வட்டம் பி. பள்ளிப்பட்டியில் தோழர் எம். எஸ். ராமநாதன் தலைமையில் கழகக் கமிட்டிக் கூட்டம் நடைபெற்றபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: மு. இரத்தினம்; துணைச்செயலாளர்: மா. வெங்கடாசலம்; பொருள் காப்பாளர்: நா. வெங்கடாசலம்; மாவட்டப் பிரதிநிதி: வெ. சாமிக்கண்ணு; செயற்குழு உறுப்பினர்கள்: மு. கண்ணு, நா. சின்னசாமி, வெ. சாம்பசிவம், மா. ராமு, மா. கோபாலன், க. கிருஷ்ணன், க. கண்ணன், ப. பாப்பண்ணன், கு. சின்னசாமி, மங்காரு ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வட கோவையில் தி. மு. கழகம் அமைப்பு

15—8—54 இரவு 9 மணிக்கு தோழர் பா. பஸ்ராசு தலைமையில் வட கோவை தி. மு. கழக அமைப்புக் கூட்டம் நடைபெற்றபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: தமிழ்க்காவலன்; துணைச் செயலாளர்: இரா. கலைமணி; பொருளாளர்: எம். ஜெகந்நாதன்; செயற்குழு உறுப்பினர்கள்: க. பழனிச்சாமி, வெ. கோவிந்தராசு, சாமிநாதன், பி. சின்னச்சாமி, ம. சுந்தரம், ச. அண்ணன்.

இலங்கை—பொரல்லை தி. மு. கழக ஆண்டு நிறைவு விழா

15—8—54 மாலை கொழும்பு பொரல்லை ஒய். எம். பி. ஏ. மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி கழக ஆண்டு விழா தோழர் இரா. அ. மணி தலைமையில் நடைபெற்றது. அவர் பேசுகையில், இலங்கையில் தி. மு. கழகத்திற்கு ஒரு பெரும் பொறுப்பும், வாய்ப்பும் இருக்கிறதென்றும், அதை இப்பொழுதே நாம் உணர்ந்து செயல்பட ஆரம்பித்தால் வருங்காலத்தில் இங்கும் நாம் உயர்ந்து விளங்க முடியுமென்றும் விளக்கிப் பேசினார்.

திறப்புரையாற்றிய தோழர் அருள், இலங்கை ஆட்சியினர் தமிழ் மொழியைப் புறக்கணிப்பதைக் கண்டித்துவிட்டு சிங்களமும் தமிழும் அரசியல் மொழி என்று சட்டம் செய்யவேண்டுமென்று கூறினார். தி. மு. கழகம் இதுபோன்ற முக்கிய பிரச்சினைகளிலும் இப்பொழுது கவனம் செலுத்த ஆரம்பித்திருப்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியது என்றும் விளக்கினார்.

கொடியேற்றி விழாவாற்றிய தோழர் கணேசன் பேசுகையில், தி. மு. கழகம், திராவிடர்கள் எங்கெல்லாம் வாழுகின்றார்களோ அங்கெல்லாம் இன்று கொடியேற்றிவிழா நடத்தும் அளவுக்கு விரிவடைந்து வளர்ந்து விட்டதென்றும், பர்மாவில், பம்பாயில், மலேயாவில், ஜாவாவில், தென்னாப்பிரிக்காவில், இலங்கையில் இங்கெங்கெலாம் கழகம் கொள்கை வழிநின்று அந்தந்த நாட்டுப் பிரச்சினைகளிலும் அதிக கவனம் செலுத்தி ஆக்கவேலை புரிந்து சிறப்படைய முனைந்து விட்டதென்றும் குறிப்பிட்டார்.

தோழர் அன்பழகன் எல்லோரையும் வரவேற்றார்.

தோழர் கே. இராசலிங்கம் இலங்கை ஆட்சியினரை எதிர்த்து பெரும் போராட்டம் நடத்த வேண்டிய சூழ்நிலை உருவாகிறதென்று குறிப்பிட்டார்.

தோழர் மாயகிருட்டினன் பேசியபின், தோழர் டி. எம். பீர்முகமது பேசும்போது இலங்கையில் தி.மு.கழகம் வளர்ந்து வரும்விதம் பற்றி விளக்கினார். கடைசியில் தலைவர் அவர்களால் கொண்டுவரப்பட்ட இலங்கையில் சிங்களத்தையும் தமிழையும் ஆட்சி மொழியாக்க சட்டம் செய்யக்கேட்டும், இலங்கையில் 5 ஆண்டுகள் வாழ்ந்தோர் எல்லோருக்கும் பிரஜா உரிமை கொடுக்க வேண்டுமெனக் கோரியும் ஆக 16 தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. (ந-கி.)

அ. கொல்லப்பட்டிபுதூர் தி. மு. க. ஆண்டு விழா

12—8—54 மாலை 4 மணிக்கு கொல்லப்பட்டியிலிருந்து, ஊர்வலம் பாண்டு வாத்தியங்களுடனும், வெடிகளுடனும் புறப்பட்டது. ஊர்வலம் முடிந்ததும் கூட்டத்திற்கு தர்மபுரி நகராண்மைக் கழக உபதலைவர் திரு. டி. டி. ராமசாமி தலைமைத் தாங்கினார். தலைவர் முன்னுரைக்குப் பின் தோழர் ஆடிப்பாதம் இன்னிசை வழங்கினார். தோழர் பி. எம். குப்புசாமி கொடியேற்றி வைத்தார். தோழர் என். வி. நடராசன் விரிவுரையாற்றினார்.

தி. மு. க. துவக்க விழாப் பொதுக்கூட்டம்

குலசேகரன் பட்டினம் சிறுநாடார் குடியிருப்பு என்ற ஊரில், 15—8—54ல், தி. மு. கழகத் துவக்க விழாவும், தோழர் வே. ஓ. முத்து தலைமையில் பொதுக் கூட்டமும் நடைபெற்றது. கூட்டத்தில், தோழர்கள் எம். என். ராமசாமி, எஸ். வீரபாகு, என். சங்கரலிங்கம், குலசை. குலசேகரன் ஆகியோர், சொற்பொழிவாற்றினர்.

வாளாந்தரவை தி. மு. கழக துவக்க விழா

15—8—54 மாலை 5 மணிக்கு வாளாந்தரவை ரயில்வே நிலையத் திடலில், தோழர் முகவை பாண்டியன் தலைமையில், தோழர் ராஜப்பா தி. மு. கழகக் கொடியை ஏற்றிவைத்தார். தோழர் சேக் சுல்தான் தி. மு. கழகக் கட்டிடத்தைத் திறந்து வைத்தார். பிறகு நடந்த பொதுக் கூட்டத்தில் தோழர் காத்தவராயன் நாட்டுப்பண் இசைத்தார்; முகவை மு. பாண்டியன், சேக் சுல்தான் சொற்பொழிவாற்றினர்.

திராவிட இளைஞர் முன்னேற்றக் கழகம்

உசிலம்பட்டி, ஆக. 21—

உசிலம்பட்டியில், திராவிட இளைஞர் முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம் 15-8-54ல் விவசாயப் பண்ணையில் நடைபெற்றபோது, நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:— செயலாளர்: ப. குருசாமி; துணைச் செயலாளர்: எ. கி. ஒ. அரிராமன்; பொருளாளர்: மு. இராசசேகரன்; விளம்பர உறுப்பினர்கள்: சிவங்காளை, பி. பி. இளமாறன்; மாவட்டப் பிரதிநிதி: உசிலைத் தம்பி ஞானப்பிரகாசம்; மற்றும் 9 பேர் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். முக்கிய முடிவுகள் சில செய்யப்பட்டதுடன் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

வெள்ளையன் சுரண்டலுக்கும் வடவரின் கொள்ளைக்கும் வேறுபாடு என்ன?

மலேயா தமிழரின் கேள்வி

கவர்னர் சம்பளம்பற்றி கண்ணியர்களின் கருத்துரை

ஐயா,

வெள்ளையன் சுரண்டும் மனப்பான்மையுடையவன் — சுரண்டுகிறான்.

கவர்னர் சம்பளம் காங்கிரஸ் ஆட்சியில் ரூ 500-க்கு மேலிருக்காது என்றவர்கள், இப்போது மாதம் சுமார் ரூ. 82,750 வாங்குகிறார்களென்றால், வெள்ளையனைப் பார்க்கிலும் வடவர்கள் பெருங் கொள்ளைக்காரர்கள் என்றுதான் கருதவேண்டியிருக்கிறது.

எனவே, ரூ. 9,93,000 ஆண்டுக்கு சம்பளம் தருவது அனியாயமானது. நாட்டின் குடிகள் நலிந்திருக்கையில் கவர்னரின் ஆடம்பரச் செலவுக்கு இப்பெருந் தொகை கொடுக்கப்படுவதைக் கண்டு நாட்டின் நலனில் அக்கரையுள்ள, கடல் கடந்த என்போன்றவர்கள் வருந்தாமலிருக்க முடியாது.

ஆகவே அப்பெருந்தொகை கொடுக்கப்படுவது நிறுத்தப்படவேண்டும் என்பதே எனது தாழ்மையான அபிப்பிராயம்.

ஆ. மருதப்பா,
ஜோகூர்பாரு—மலேயா,

★

ஐயா,

ஜனநாயக நாட்டில் கவர்னர் பதவி அவசியமா? அப்படியே அவசியமானாலும் ஆண்டொன்றுக்கு 9,93,000 ரூபாயா சம்பளம்? பல இலட்ச ரூபாய் சம்பளமாகப் பெறும் இந்தக் கவர்னர் வேலைதான் என்ன? நாட்டியக் கச்சேரிக்கும், பாட்டுக் கச்சேரிக்கும் பாராட்டு வழங்கவும், தேர்தலில் தேர்ந்தெடுக்கப்படாமலேயே மந்திரி பதவிக்கு வர சட்டசபையின் கொல்லைப்புற கதவை திறக்கவும் தானே பயன்படுகின்றது. இதற்குத்தானா ஏழை எளிய பாட்டாளி மக்களைப் பிழிந்து வரியாக வாங்கும் பணம் பயன்படவேண்டும்?

"சுதந்திர இந்தியாவில் 50 ரூபாய்க்குக் குறைவாகவோ, 500 ரூபாய்க்கு மேலாகவோ சம்பளம் வாங்குபவர் இருக்க மாட்டார்கள்" என்று காந்தியார் கூறினாரே; காந்திக் குல்லாய் தலையிலணிந்து காந்திக்கு கோயில் கட்டும் கவர்னர் இதை உணராமலிருப்பதேன்? அவரின் அநியாய சம்பளக் கொள்ளையைத் தடுத்து நிறுத்த, நமது 'தறப் போர் ஆரம்பமாகட்டும்' என அண்ணா அவர்களைக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

கி. புதுமைக்கண்ணன்,
சத்தியமங்கலம்.

★

ஐயா,

ஏராளமான தமிழ் நாட்டு மக்கள், நாள்தோறும் வேலையின்றியும், வாழ வழியின்றியும் வீதி வீதியாக பிச்சை எடுத்துத் திரியும்போது, அதற்கு ஒரு வழியும் செய்யமுடியாத சர்க்கார், தனி ஒரு மனிதருக்கு — கவர்னர் என்ற பெயரால்—ஆண்டு ஒன்றுக்கு ஏறக்குறைய பத்து லட்சம் ரூபாயை சம்பளமாகக்கொடுத்து பணத்தைப் பாழ்படுத்துவதை இனியும் சகித்துக் கொண்டிருக்க முடியாது. இதற்காக தி. மு. க. போராட்டம் கட்டாயம் துவக்க வேண்டும். போராட்டம் துவக்கும்போது என்னைப் போன்ற இளைஞர்கள் பங்கெடுத்துக் கொள்ளத் தயங்கமாட்டோம்.

வை. சங்கரமூர்த்தி,
முன்னேர்கள்-ஆலப்புழை.

ஐயா,

கவர்னருக்கு ஏன் இவ்வளவு சம்பளம்? நம் நாடு ஏழை நாடு ஆயிற்றே! இத்தனை பணம் இவருக்கு எதற்கு? அவரும், அவருடைய குடும்பமும் உணவாகவா முத்தும் பவளமும் சாப்பிடுகிறார்கள்? தமிழகமெங்கும் பட்டினி கிடந்து மடிகிறார்கள்; ஆனால் ஆடம்பர கொலுபொம்மையான கவர்னருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 10 லட்சம் சம்பளம் தேவையா? 'காலணா காசுக்கு, கண்ணில்லாதவன்' என்று கதறும் ஏழைகள் நிறைந்த நாட்டிலே, தனிபொரு மனிதருக்கு இவ்வளவு பெருந்தொகையை செலவிடுவதைத் தடுக்க போராட்டம் நடத்துவது மிகவும் அவசியமாகும்.

நா. சீனிவாசன்,
அத்திப்பாளையம்,

★

ஐயா,

வடநாட்டிலே மதவெறி பிடித்து, மதியிழந்து, ஒருவர் மண்டையை ஒருவர் உடைத்து, அகதியாக மாறியவர்களுக்கு கோடிக் கணக்கான ரூபாயை செலவு செய்யும் மத்திய சர்க்காரின் பாதுகாவலராக இருக்கும் கவர்னருக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 10 லட்சம் கப்பமாகக் கட்டுவது கண்ணியமா?

இரா. சிவபாண்டியன்,
கொழும்பு—இலங்கை.

★

ஐயா,

கவர்னர் சம்பளக் குறைப்புப் போராட்டம் பற்றி பலர் எழுதிய கடிதத்தில், சிலர் அண்ணல் காந்தியடிகளின் பெயரை எழுதியதும் எனக்கு ஞாபகம் வருகிறது—அவரது வாழ்க்கையும் மற்றவருடைய வாழ்க்கையும்; காந்தியடிகள் அரை நிர்வாணமாக வாழ்ந்தார்; ஏனென்றால், 'எனது நாட்டு மக்களில் பெரும்பாலானோர் இப்படித்தான் வாழ்கிறார்கள்,' என்று கூறினார்.

அந்த உலக உத்தமரின் வழியில், தங்கள் வாழ்க்கையை நடத்துவதாகக் கூறிக்கொள்ளும் கவர்னர், ஆடம்பரத்தின் உச்சியில் வாழ்கிறார்.

வடநாட்டார் சுரண்டல், தொழில் முறையில் என்று நினைத்தோம். இப்படியும் ஒரு சுரண்டல் கவர்னர் பெயர் சொல்லி, சுரண்டுவதற்காக இந்த அரசாங்கம் பாடுபடுகிறது.

இவர்கள் கண்ணியமுள்ளவர்கள் என்றால் இந்தக் கொள்ளை சம்பளத்தைக் குறைத்துக்கொள்ளட்டும்; இல்லை என்றால் தி. மு. கழகம் போர் முரசு கொட்டியே தீரும்.

ஏ. எஸ். அருளன்,
சென்னை.

★

ஐயா,

கவர்னரின் சம்பளக் குறைப்புப் போராட்டம் மிக மிக அவசியம். 'தனி யொருவனுக்கு உணவில்லை யெனில் ஜெகத்தினை அழித்திடுவோம்,' என்று பகர்ந்த பாரதியின் மொழிகளைப் பின்பற்றுகிறோம் என்று கூறிக்கொண்டு 'பதவி'யின் பெயரால் மக்களின் வரிப் பணத்தைச் சூறையாடுவதா? அதற்கு உடனடியாக நீங்கள் திட்டமிட்டிருக்கும் போராட்டக் கொள்கைகளை ஆதரிக்கிறேன்; அத்துடன் போராடவும் அணிவேன்.

க. திருவேங்கடம்,
சிதம்பரம்.

திமு.க. பொதுச்செயலாளர்
அண்ணாதுரை
சுற்றுப்பிரயாண நிகழ்ச்சி

28—8—54: திருவெண்ணெய் நல்லூர் மாலை 6 மணிக்கு தி. மு. கழகப் பொதுக் கூட்டம்

29—8—54: கல்லக்குடி மாலை 6 மணிக்கு தி. மு. கழக ஆண்டு விழாப் பொதுக் கூட்டம்

30—8—54: காலை முசிறி திருமணம்; மாலை 6 மணிக்கு திருச்சி தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

31—8—54: துறையூர் மாலை 6 மணிக்கு திருச்சி தி. மு. கழக ஆண்டு விழாப் பொதுக்கூட்டம்

2—9—54: கோடாச்சேரி மாலை 6 மணிக்கு தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

3—9—54: நாகப்பட்டணம் மாலை 6 மணிக்கு தி. மு. கழகப் பொதுக்கூட்டம்

திருவெண்ணெய்நல்லூர்

தி. மு. க. முதல் ஆண்டு விழா கார்னேஷன் டாக்கீஸ் அருகில் உள்ள திடலில்

28—8—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: தி. சி. சுந்தரம்

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை
ஏ. கோவிந்தசாமி, எம்.எல்.ஏ.
அ. பொன்னம்பலனார்

☆

கல்லக்குடி தி.மு.க. முதல் ஆண்டு விழாப் பொதுக்கூட்டம்

29—8—54 மாலை 6 மணிக்கு

தலைவர்: அ. தம்புசாமி

பேசுவோர்:

சி. என். அண்ணாதுரை
ஏ. பி. தருமலிங்கம்
அ. பொன்னம்பலனார்

குறிப்பு:—காலை 8 மணிக்கு அன்பில் தோழர் ஏ. பி. தருமலிங்கம் அவர்கள் தி. மு. கழகக் கொடியை ஏற்றி வைப்பார். காலை 10 மணிக்கு கழக அங்கத்தினர்கள் கூட்டம் நடைபெறும்.

சென்னை 37-வது வட்ட தி. மு. கழக தோழர்கட்கு

25—8—54 புதன் இரவு 7 மணிக்கு நீராவப்பேட்டை கழகப் பணிமனையில் செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம் 19—9—54-ல் ஆண்டு விழா ஏற்பாடுகள் பற்றியும், மற்றும் பல விடயங்கள் குறித்தும் ஆலோசிக்கப்படும்.

திருக்குறள் வகுப்பு

சென்னை, பெத்துநாயக்கன் பேட்டை, தாய்மார்கள் கழகச் சார்பில் 24—8—'54 செவ்வாய் பகல் 2 மணி முதல் 3 மணி வரை திருக்குறள் வகுப்பு நடைபெறும். பேராசிரியர் புலவர் மயிலை சிவமுத்து 'வான் சிறப்பு' என்பது குறித்து சொற்பொழிவாற்றுவார்கள். இடம்: முத்து கிருஷ்ணன் தெரு, சென்னை-1.

ஆமத்தாபாத் நகர தி. மு. கழக குழுக் கூட்டம்

"ஆமத்தூர் கழக மாடியில் 29—8—54 ஞாயிறு மாலை 3-மணிக்கு நகர குழுக் கூட்டம் நடைபெறும். நகரக் குழு பிரதிநிதிகள் தவறாமல் அழைப்பாகக் கருதி வருமாறு தயவாய் கேட்டுக்கொள்ளுகிறேன்" என்று அமைச்செயலாளர் க. பெருமாள் அறிவிக்கிறார்.

★★★★★★★★★★★★★★★★★★-★★★★★

புதிய முறை!

"மாநாடுகளில் நீங்கள் ஆயிரக்கணக்கில் கூடுகிறீர்கள்; இனி, இம்மாதிரி மாநாடுகளில், ஒரு புதிய முறை ஒன்றைப் புகுத்த எண்ணியுள்ளேன்; மாநாட்டில் பேசப்படும் விஷயங்கள் பற்றி, கேட்பவர்களுக்குச் சந்தேகங்கள் இருந்தால் எழுதி அனுப்ப வேண்டும்; அவற்றிற்கு, குறிப்பிட்ட பொருள் பற்றி எடுத்துரைத்த சொற்பொழிவாளரே, மறுநாள் விளக்கம் தரவேண்டும்; அப்படிச் செய்வதினால், சொற்பொழிவாற்றும் கழகத் தோழர்கள் மிகவும் பொறுப்புடன் பேசுவார்கள் என்பது மட்டுமல்ல; உங்களுக்கும் பொருள்களைப் புரிந்துகொள்வதில் பொறுப்புணர்வு வளரும். மேலும் இம்மாதிரி மாநாடுகளில், சொற்பொழிவைக் கேட்கும் உங்களுக்கும், பேசும் எங்களுக்கும் எந்தவித நேரடித் தொடர்பும் இல்லாமற் போய்விடுகிறது; நீங்கள் கேள்விகள் கேட்பதின்மூலம், நாங்கள் உங்களுடன் தொடர்பு கொள்ளவும் ஏதுவாகிறது.

நீங்கள் சந்தேகங்களை கேட்காது, எல்லாம் புரிந்தவர் போல் போய்விட்டாலும், நாங்கள் விடமாட்டோம்; ஒரு மாநாட்டில் வேண்டுமென்றே தப்பும் தவறுமாக சிலவற்றைப் பேசுவோம்—நீங்கள் அவற்றைக் கவனிக்கிறீர்களா என் பதைக் காண! எனவே, மாநாடுகளுக்கு வரும் தோழர்கள், இனி அப்படி வரும் ஒரு புதிய முறையை தங்கள் வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்."

—காஞ்சி மாநாட்டில் அண்ணா

★★★★★★★★★★★★★★★★★★-★★★★★

பெரும் எதிர்ப்பு வெள்ளம்............

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

இவற்றில் எதிலேனும் ஒன்றில் மட்டும் ஈடுபட்டு, அதிலேயே மூழ்கி விடுவது கூடாதது.

இத்தனை துறைகளிலும் தி. மு. கழகம் படைவெடுத்திருக்கிறது. அத்தனை துறைகளையும் நல்லதாகக வேண்டுமென எண்ணிப் பாடுபட்டு வருகிறது.

அதன் அயராத, சலியாத உழைப்பினால் உயர்வைப் பெற்று வருகிறது; உருப்படியான பலன் கண்முன் தெரிகிறது; கழகம் வளருகிறது.

வளர்ந்து வருகிற அந்தச் சக்தியை ஆக்க வேலைக்கும் பயன்படுத்தலாம்; அழிவு வேலைக்கும் பயன்படுத்தலாம்!

இந்தச் சக்தியை வளர்த்து, இதற்குக் கட்டுப்பாட்டு உணர்வைப் போதித்து, கூரிய வாளையும் தந்து, குறி பார்த்து வீசவும் சொல்லித் தர வேண்டும்.

அந்தச் சக்திக்குத் தரப்படும் வாளும் கூரியதாயிருக்க வேண்டும்; குறியும் தெரியவேண்டும்.

நாம் எதிர்த்துப் போரிட்டு வீழ்த்தவேண்டிய குறிகள் ஒன்றல்ல, இரண்டல்ல!

சங்கராச்சாரியர்கள், தம்பிரான்கள் ஆகியோரின் ஆதிக்கத்தையும் அவர்கள் போதிக்கும் மதக் கருத்துக்களையும், அவைகளினால் மக்களிடை இடம் பெறும் மாச்சரியங்களையும் மூடப்பழக்கங்களையும், தெய்வ நம்பிக்கைகளையும், குருட்டுப் பிடிவாதங்களையும் போக்கியாக வேண்டும். ஏழை—பணக்காரன் என்ற ஏற்றத்தாழ்வு போக்கப்பட வேண்டும். திராவிடத் தனியரசு என்ற லட்சியத்தை நிறைவேற்றியாக வேண்டும். இத்தனை குறிகளையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

குறி தெரிந்தால் மட்டும் போதாது. கூரிய வாளையும் பெற்று, குறி பார்த்து வீசத் தெரிந்தவர்களையும் அந்தந்த இடத்திலேயே உண்டாக்கியாக வேண்டும். அப்போதுதான் கழகம் ஒரு நல்ல ஆக்க சக்தியாக விளங்க முடியும்.

காங்கிரசாரைப் போல் அல்லது பிற கட்சியினரைப் போல் நமக்கு ஒரே ஒரு குறி அல்ல!

காங்கிரசாருக்கு அன்னை பாரதமாதாவின் கைகளில் இருந்த வெள்ளையர் ஆதிக்கமெனும் அடிமைச் சங்கிலி ஒன்றுதான் குறி!

நமக்கு அப்படி அல்லவே! குறிகள் பல, நம்மால் வேண்டியுள்ளன."

—என்று, காஞ்சி கன்னன் டாக்கீஸ் திடலில் 22—8—54 ஞாயிறன்று நடைபெற்ற செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக 2-வது ஆசிரியர் மாநாட்டை திறப்பு ஆற்றலையின தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் குறிப்பிட்டார்.

[பொதுச் செயலாளர் அவர்களின் சொற்பொழிவின் இதரப் பகுதிகள் தொடர்ந்து வெளிவரும்]

திரு—தமிழர் பிரச்சினை:

நேரு தலையிடுகிறார்!

திரு—கொச்சி மந்திரி சபை அவசரமாகக் கூடுகிறது!

சென்னை, ஆக. 22—

திரு—கொச்சி தமிழர்களின் நியாயமான பீதியை உடனடியாகப் போக்க பண்டித நேரு தலையிடுவார் என்று தெரிகிறது.

இது பற்றி ஆலோசிக்க திரு—கொச்சி மந்திரி சபையின் அவசரக் கூட்டமொன்று 23-ம் தேதியன்று நடைபெறும் என்று திரு—கொச்சி அமைச்சர் ஒருவர் பத்திரிகை நிருபர்களிடம் கூறினார்.

பண்டித நேருவின் பேச்சுகளும், தமிழர்கள் வாழும் பிரதேசத்தின் வருங்காலத்தைக் குறிக்கும் எவ்வித சம்பவமும் இல்லை என்பது குறித்த மேலும் கூறினார்.

செப்டம்பர் முதல் வாரத்தில் டில்லி, கட்சியின் தேசிய தலைவரைக் கமிட்டி கூடி, திரு—கொச்சி மந்திரி சபையின் போக்கு பற்றியும், திரு—தமிழர்களின் எதிர்காலம் பற்றியும், பிளவுபட்ட ராஜிநாமா பற்றியும் முடிவு செய்யுமென்று தெரிகிறது.

சமூக சீர்திருத்த மாநாடு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பேசினார்.

தோழர் க. அன்பழகன் நமது திராவிடச் சமுதாயம் "மறுமலர்ச்சி" பெற வேண்டியதின் அவசியம் குறித்து அறிவுரை சொற்பெருக்காற்றினார்.

இப்பொழுது கலைவாணர் என். எஸ். கே. அவர்கள், தோழர் சீனி—தோழியர் ராஜேஸ்வரி ஆகியோரை வாழ்க்கைத் துணைவர்களாக ஆக்கி வைத்து வாழ்த்தினார்.

இறுதியாக தோழர் நெடுஞ்செழியன் "வள்ளுவர் வகுத்த நெறி" என்பது பற்றியும் உள்ள வாழும் நெறிகளின் தலை சிறந்தது என்பதை எடுத்துச் சொல்லிக்கொண்டிருந்தார்.

அவர் சொன்னார் என்று, பொறுமை கொண்ட கருமேகங்கள் குளிர்ந்து மழையாய் மாறி தோழர் நெடுஞ்செழியனின் சொற்பொழிவுக்கும் போட்டியாய் வந்து பொழியத் தொடங்கின. என் செய்வது?

மாநாடு அத்துடன் கலைக்கப்பட்டது, தலைவரின் முடிவுரையுடன். பெய்த அந்தப் பெருமழையின் காரணமாய், இரவு பொதுச்செயலாளர் அண்ணா அவர்கள் தீட்டிய "சந்திரமோகன்" காட்சி நாடகமேயே போய்விட்டான்.

☆

ஆசிரியர் மாநாடு

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக 2-வது ஆசிரியர் மாநாடு, 22—8—54 ஞாயிறு அன்று காலை 10 மணி அளவில் துவங்கியது.

முன்னாள் பெய்த பெருமழை, மாநாட்டுத் திடலை சேறாக்கி விட்டிருந்தது. தோழர்கள் என். வி. நடராசன், இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் மேற்பார்வையில், தொண்டர் படையினர் தான் மாநாட்டுத் திடல் முழுதும், ஆற்று மண் தூவப்பட்டு, தோழர்கள் சிரமமின்றி அமருவதற்கேற்ச் சீர்செய்யப் பட்டது.

மாநாட்டுத் துவக்கத்தில் தோழர் முருகேசனும், நாகூர் அனிபாவும் கழகக் கருத்தமைந்த இன்னிசை வழங்கினர்.

தோழர் சி. வி. எம். அண்ணாமலை வரவேற்புரை நிகழ்த்தினார்.

திருச்சி தோழர் எம். எஸ். மணி மாநாட்டினைத் துவக்கி வைத்தார்.

மாநாட்டிற்குத் தலைமை தாங்கி நடத்தித் தருமாறு, தூத்துக்குடித் தோழர் இரா. சு. தங்கப்பழம் அவர்களை வரவேற்புக் குழுத் தலைவர் முன் மொழிந்து கேட்டுக் கொண்டதை தோழர்கள் ஆரங்கண்ணல், அன்பில் தருமலிங்கம், ஏ. கே. சி. கிருட்டிணசாமி, சி. வி. ராசகோபால், என். வி. நடராசன், தோழியர் அலமேலு—அப்பாதுரை ஆகியோர் வழிமொழிந்து பேசினர்.

தோழர் இரா. சு. தங்கப்பழம் தலைமை ஏற்று, சிறந்ததோர் உரை நிகழ்த்தினார்.

அடுத்து சட்டசபை உறுப்பினர்களான டி. சண்முகம், என். தெய்வசிகாமணி ஆகியோர், தி. மு. கழகத்தின் பணிகளைப் பாராட்டியும், லட்சியத்தை வரவேற்றும் பேசினார்கள். அத்துடன் மாநாடு இடைவேளைக்காகக் கலைந்தது.

மீண்டும் 4 மணிக்கு மாலை நிகழ்ச்சிகள் தோழர் முருகேசன் இசையுடன் துவங்கின.

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக 2-வது மாநாடுகளின் வரவேற்புக் குழு உறுப்பினர்களாலும், பிரதிநிதிகளாலும் விவாதித்து எடுக்கப்பட்ட முடிவுகள், தீர்மான ரூபத்தில் கழக முன்னணி வீரர்களாலும், தோழர்களாலும் மக்களுக்கு விளக்கப்பட்டு ஒரு மனதாய் நிறைவேறின.

இறுதியாக பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் கருத்துள்ள செறிவு நிறைந்த, அரசியல் முக்கியத்துவம் மிகுந்ததோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். நன்றி கூறலுடன் மாநாடு முடிவுற்றது.

இரவு தோழர் மு. கருணாநிதி தீட்டிய 'அம்மையப்பன்' நாடகம், எஸ். எஸ். ராஜேந்திரன் நாடக மன்றத்தாரால், தோழர்கள் எஸ். எஸ். ராஜேந்திரன், டி. வி. நாராயணசாமி, எம். என். கிருஷ்ணன், எஸ். ஆர். சுப்பிரமணியம், தோழியர் ஜி. சகுந்தலா ஆகியோரின் திறம்பட்ட நடிப்புடன் சிறப்புற நடைபெற்றது.

கற்போம்; கற்றுக் கொடுப்போம்!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

பட்ட போராட்ட முறைகளிலும் சோஷலிசத்தின் அடிப்படைக் கொள்கை எதுவும் ஆட்டம் கண்டதில்லை. அதை அடையும் முறையிலே தேர்ந்தெடுத்துக் கொண்ட பாதைகள்தான் வெவ்வேறு பாகுபாடுகள் தான் அவைகள்."

மேலும் அவர் பேசுகையில், "சமுதாய முன்னேற்றத்திற்கான உலக முழுமைக்கும் பொதுவான திட்டம், 'சர்வரோக நிவாரண மருந்து' இல்லை.... நாம், நாட்டுக்குத் தேவையான உரிமையைப் பற்றி யோசிக்காமல், நம்முடைய நிலைமைகளை மட்டும் அனுசரித்துப் பார்த்தால், யாருடைய தலைவர்கள் என்று சொல்லிக் கொண்டு, ருமேனிய அரசாங்கம் மாற்றி விடப்பட்டிருந்ததாக, கடமை காமே பிரிந்து வந்தான் அதை அவரவருக்கு நாம் ஆளாக வேண்டி நேரும். சோஷலிசம் என்பது வெறும் அறிவுக்கோள் மூலம் அமுலாக்குவதல்ல; அது ஒரு வாழ்க்கைத் தத்துவம்!"

இறுதியில், சிலோனின் உணவுத் தலைமை அமைச்சர் விருந்தினர் களின் மேலான ஆலோசனைகளை ஏற்றுக்கொண்டு, தேசங்களின் கல்வி வளர்ச்சிக்கு முறைகளையும் பொறுப்பையும் சாதித்திருக்கிறோம், அவைகள் பொருளாதார அளவுக்கு திருப்தியுறச் செய்யப்படவில்லை என்பதையும் உணர்கிறோம்; அவைகள் திருத்தப்பட்டு அவ்வாறே மாற்றியமைக்கப்படலாம்," என்று கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழகத் தோழர் இரா.பெரியசாமி, என். ஏ. அனந்தன், தமிழ் அத்தகம் ... தேசிய ... [illegible] ... நடைபெறும். ஆசிரியர்: இ. என். அண்ணாதுரை